# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC.05/2024 | Date | : 04.09.2025 |
| Deposition of Witness for | : எ.சா.2 | Taluk | : |
| Name | : சுரேஷ் | Calling | : |
| Father Name | : ராஜீ | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.09.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரியில் உள்ள ஐசிஐசிஐ வங்கியில் கிளை மேலாளராக பணிசெய்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மண்டபத்துகாடு, தீரன்சின்னமலை நகர், அக்கமாபேட்டை, சங்ககிரி, சேலம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு.கணேசன், என்பவர் எங்களது கிளையின் வாடிக்கையாளர். அவரது வங்கி கணக்கு எண்.088601503999 என்பதாகும்.

2) கடந்த 01-01-2022ம் தேதிமுதல் 30-12-2023ம் தேதிவரையிலான கணேசன் என்பவரின் வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். **(01-01-2022ம் தேதிமுதல் 30-12-2023ம் தேதிவரையிலான கணேசன் என்பவரின் வங்கி கணக்கு அறிக்கை எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

1) இவ்வழக்கு காசோலை எங்களது வங்கி கிளையால் எதிரி கணேசனுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி, காசோலை கடந்த 06-06-2023 ம் தேதி வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட என்ன காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டது என்றால் போதிய பணமில்லை என்ற காரணம் குறிப்பிட்டு கடந்த 07-06-2023 ம் தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது.

2) கடந்த 07-06-2023 ம் எதிரி கணேசன் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருப்பு இருந்தது என்றால் ரூ.3,241.36/- இருந்தது. காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை இல்லாததால் தான் மேற்படி, காசோலை திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Suresh